# சினிமா

## நியூயோர்க்-திரைவிமர்சனம்




விமர்சனத்திற்கு முன்னாள் சின்ன ஒரு பிளாஷ் பேக் :

*2001 செப்டம்பர் 11 உலகையே புரட்டிப்போட்ட இரட்டைக்கோபுர தாக்குதலின் பின்னர் அமெரிக்காவில் வெளிநாட்டைச் சேர்ந்த கிட்டத்தட்ட 1200க்கு மேற்பட்டவர்கள் அமெரிக்காவினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சித்திரவதை முகாம்களில் அடைக்கப்பட்டார்கள். மூன்று வருடத்தின் பின்னர் பலர் தீவிரவாதி என எந்தவித ஆதாரமும் இல்லாதபடியால் விடுதலை ஆனார்கள். விடுதலையான பலர் மன உளைச்சலுக்கும், உட்காயங்களும் ஆளானார்கள். பின்னர் ஜோர்ஜ் புஷ் தான் யாரையும் சித்திரவதை செய்யச் சொல்லி உத்தரவிடவில்லை என தெரிவித்தார். தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா தான் பதவி ஏற்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்காவின் சித்திரவதை முகாம்களை மூடப்போவதாக அறிவித்தார்.*

இனி நியூயோர்க்கினுள் செல்வோம்.

யாஷ் சோப்ராவின் தயாரிப்பில் கபீர் கானின் இயக்கத்தில் ஜோன் ஆப்ரகாம், கத்ரினா கைவ் இர்பான் கான் மற்றும் நீல் நித்தின் முகேஷ் நடிப்பில் வெளிவந்திருக்கும் ஹிந்தி திரைப்படம் நியூயோர்க்.

மேலே கூறப்பட்ட செப்டம்பர் 11 தாக்குதலை அடிப்படையாக வைத்து முற்றுமுழுதாக அமெரிக்காவில் படமாக்கப்பட்டுள்ளது.

ஓமர்(நீல் நித்தின் முகேஷ்)ஒரு நாள் எவ்பிஐ(FBI)இனால் கைது செய்யப்படுகின்றான். அவனை விசாரிக்கும் எவ்பிஐ அதிகாரியான ரொஷான் (இர்பான் கான்) அவனுக்கு அவனுடைய சினேகிதன் சாம் என்ற சமீர் ஷேக்குக்கும் தீவிரவாதிகளுடன் தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டுகிறார். இதனை மறுத்த ஓமர் தாம் இருவரும் அப்பாவிகள் என்று நியூயோர்க் ஸ்டேட் யூனிவர்சிட்டியில் 1999ல் ஒன்றாக படித்தவர்கள் எனவும் விசாரணையின் போது கூறுகிறான்.

1999ல் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு உயர் கல்விக்காக வரும் ஓமர் அங்கே சாம் என்ற அமெரிக்க இந்தியன், மாயா என்ற அமெரிக்க இந்தியன்(கத்ரினா கைவ்)ஆகியோருடன் நட்பாக இருக்கும் அதேவேளை ஒருதலையாக மாயாவைக் காதலிக்கிறான். ஒருநாள் மாயா தன்னைக் காதலிக்கவில்லை சாமைத்தான் காதலிக்கிறாள் என அறிந்து அவளைவிட்டு விலக முயல்கின்றபோது இரட்டைக் கோபுரம் தாக்கப்படுகின்றது. அந்ததாக்குதலின் பின்னர் ஓமர் பிலடெல்பியாவிற்கு இடம் மாறுகின்றான்.அதன்பின்னர் அவனை 2008 அல்லது 2009 கால கட்டத்தில் கைது செய்யும் ரொஷான் அவனை குற்றமற்றவன் என நிரூபிக்க சாமுடன் சென்று இணைந்து எவ்.பி.ஐக்கு உளவுவேலை செய்யுமாறு வற்புறுத்துகிறார். இதனிடையில் அவர் சாமுக்கும் மாயாவுக்கும் திருமணமாகிவிட்டது அவர்களுக்கு ஒரு குழந்தையும் இருக்கின்றது, மாயாவின் வாழ்க்கையும் சாமின் வாழ்க்கையும் நல்லாயிருக்கவேண்டும் என்றால் ஓமர் கட்டாயம் சாமை கண்காணித்து அவனை தம்மிடம் ஒப்படைக்குமாறு மீண்டும் மீண்டும் வற்புறுத்த ஒரு கட்டத்தில் அந்த வேலையைச் செய்ய ஓமர் ஒப்புக் கொள்கிறான்.

ஜோன் ஆப்ரகாம், நீல் நித்தின் முகேஷ், இர்பான் கான்(பார்ப்பதற்கு நம்ம எஸ் ஜே சூர்யா போல் இருக்கிறார்) கத்ரினா கைவ் ஆகியோர் நடிப்பில் எந்தக் குறையும் வைக்கவில்லை.

ஆதித்யா சோப்ராவின் கதைக்கு திரைக்கதை வசனம் எழுதியிருப்பவர் சந்தீப் ஸ்ரீவத்சவா. இவரது கொஞ்சம் மெதுவான திரைக்கதையை இயக்கியிருக்கிறார் கபீர் கான். பல இடங்களில் அடுத்த காட்சி இதுதான் என ஊகிக்கவைக்கும் திரைக்கதை. இது கொஞ்சம் பலவீனமாக இருந்தாலும் தெளிவான திரைக்கதை என்பதால் ரசிக்கும்படி இருக்கின்றது.

இடைச்செருகல் இல்லாமல் திரைப்படத்துடன் ஒன்றி வருகின்ற பாடல்கள் என்பதாலோ என்னவோ பாடல்கள் போரடிக்கவில்லை. அத்துடன் வழமையான ஹிந்திப்படங்கள் போல் பாடல்களும் இல்லை மொத்தம் இரண்டோ மூன்று பாடல்கள் தான் படத்தில் வருகின்றது. ஒரு டூயட் கூட இல்லை என்பது அதிசயம் தான்.

அத்துடன் கதைக்களம் அமெரிக்காவில் இருந்தாலும் எந்தக் கெட்டவார்த்தையும் இல்லாமல் எடுத்திருக்கிறார்கள். வேட்டையாடு விளையாடுவிலும் இதேபோல் கௌதம் மேனன் முயற்சி செய்திருக்கலாம்.

அஷீம் மிஸ்ராவின் ஒளிப்பதிவு கண்ணில் ஒற்றிக் கொள்ளும்படி இருக்கின்றது. மிக அழகாக நியூயோர்க் நகரத்தை படம் பிடித்துக்காட்டியுள்ளார். 1999ஆம் ஆண்டுக் காட்சிகளில் பின்னணியில் இரட்டை கோபுரத்தை காட்டியிருக்கிறார்கள்.

சித்திரவதை முகாம் (Detention Camp) காட்சிகள் வேறு சில நினைவுகளையும் ஏற்படுத்துகின்றது. அத்துடன் தீவிரவாதிகள் எனக் காண்பிக்கும் அனைவரும் இஸ்லாமியர்களாக இருக்கும் அதேநேரத்தில் எவ்பிஐ அதிகாரியான இர்பான் கானும் ஒரு இஸ்லாமிய பாத்திரத்திலேயே நடித்திருக்கிறார். அமெரிக்கா போலீசின் மனிதாபிமானமற்ற போக்கை சில காட்சிகளில் சாடியிருக்கிறார் இயக்குனர். இறுதிக்காட்சியில் அமெரிக்கர்கள் தீவிரவாதி ஒருவனின் மகனை ஹீரோவாக கொள்கிறார்கள் என்ற அமெரிக்கர்களின் பரந்த மனப்பான்மையையும் இயக்குனர் பதிவுசெய்யத் தவறவில்லை.

தீவிரவாதி என்ற பெயர் ஒரு மனிதனின் வாழ்க்கை எப்படி மாற்றுகின்றது என்பதை காத்திரமாக சொல்லும் படம் தான் நியூயோர்க்.

டிஸ்கி: இப்படியான திரைபடங்கள் ஏன் தமிழில் வருவதில்லை? அப்படி வந்தாலும் ஏன் ஓடுவதில்லை? என்ற கேள்விக்கு யாராவது பதில் தாருங்கள்.

- *-வந்தியத்தேவன்.*

## சினித்துளி

### இசை சாகசக்காரன் (1958 - 2009)



இதோ இறந்துவிட்டான் அந்த மாபெரும் இசை சாகசக்காரன். அடுத்தமாதம் பிரம்மாண்ட விடைபெறுதல் இசை நிகழ்ச்சிக்கான (50 concerts) டிக்கெட்டுகள் பரபரப்பாக விற்றுக்கொண்டிருக்கும் வேளையில் இந்தக் கலைஞன் அதற்கு முன்பாகவே விடை பெற்றுவிட்டான், அவசரக்காரன்.

அசாத்தியமானவன். கின்னஸ் சாதகைக்காரன். 75 கோடி ரெக்கார்டுகள் விற்று தீர்ந்த இசையின் சொந்தக்காரன். 13 கிராமி விருதுகளுக்கு சொந்தக்காரன். நடன அசைவுக்கு காப்புரிமை வாங்கி வைத்திருக்கும் கலைஞன். நிகழ்ச்சிகள் மூலம் நிதி திரட்டி, அமைப்புகள் மூலம் உதவி செய்தவன். பொது வாழ்க்கையில் மன்னன்.

### இயக்குநர் லோஹிததாஸ் மரணம்!



பிரபல எழுத்தாளர் - திரைப்பட இயக்குநர் லோஹிததாஸ் (54) யூன் 28 காலை கொச்சியில் மாரடைப்பால் மரணமடைந்தார். தமிழக அரசின் விருது பெற்ற சிறந்த படம் 'கஸ்தூரிமானை' இயக்கியவர். கலைப்படம், கமர்ஷியல் படம் என்று பிரிக்கத் தேவையில்லை. "கமர்ஷியல் படங்களும் ஒரு கலைதான். அதை உருவாக்குவதில் உள்ள சவால்களைச் சந்திக்க விரும்பாதவர்களே கமர்ஷியல் ஹீரோக்களைத் திட்டுகிறார்கள்" என்று கூறிவந்தவர் லோஹிததாஸ்.

### எந்திரனில் வைரமுத்து மகன்!



கவிஞர் வைரமுத்துவின் மகன் மதன் கார்க்கியும் இப்போது பாடலாசிரியராகிறார் அதுவும் ரஜினியின் எந்திரன் படத்தின் மூலம்.சாதாரண படங்களில் அறிமுகமானல், புகழ் வெளிச்சம் பட நீண்ட காலம் பிடிக்கும் என்பதை உணர்ந்த வைரமுத்து, ரஜினியின் எந்திரன் படம் மூலம் அந்த அறிமுகம் நிகழவேண்டும் என ஆசைப்பட்டார். தனது ஆசையை ரஜினியிடமும், படத்தின் இயக்குநர் ஷங்கரிடமும் அவர் வெளிப்படுத்த, உடனடியாக பச்சை சிக்னல் கிடைத்தது இருவரிடமிருந்தும். இப்போது எந்திரன் படத்துக்காக தனது முதல் பாடலை எழுதியுள்ளார் வைரமுத்து மகன் மதன் கார்க்கி.விரைவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரும் என்கிறார்கள்.

### விவேக்கின் புதிய படம்!



வடிவேலு ஒரு பக்கம் கருணாஸ் ஒரு பக்கமாகவும் ஹீரோவாக நடிக்கும் படங்களின் எண்ணிக்கையை உயர்த்திக் கொண்டுபோக தன்பங்குக்கும் தயாராகிவிட்டார் நகைச்சுவை நடிகர் விவேக்.

விவேக் ஹீரோவாக அரிதாரம் பூசிய 'பஞ்சு' மற்றும் 'சொல்லி அடிப்பேன்' படங்கள் பாதியிலேயே நின்றுபோன நிலையில் மூன்றாவதாக நடித்துவரும் 'மகனே என் மருமகனே' படமாவது வரவேண்டும் என வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டி வருகிறாராம் முற்போக்கு சிந்தனை பேசும் விவேக்.நான்காவதாக 'நான்தான் பாலா' என்ற படத்தில் கதாநாயகன் வேஷம் கட்டுகிறார் விவேக்.வித்யாசாகர் இசையில் வாலி-வைரமுத்து பாடல்கள் எழுதும் இப்படத்தின் படப்பிடிப்பு ஆகஸ்ட் மாதம் தொடங்குகிறதாம். அக்ரஹாரத்து இளைஞனாக நடிக்கிறார் விவேக். நாயகி தேர்வு நடந்து வருகிறது. அக்ரஹாரவாசிக்கும், அக்கிராமவாசிக்கும் இடையே நடக்கும் சுவாரஸ்யமான பிரச்சனைகள்தான் படத்தின் கதையாம்.





SRI KALI MATA Face reading & Astrology Center

இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் Pandit S.M.Sahadevaraju Swamiji Mrs Subbuluxmi

உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை தீமைகள், பற்றிய விபரங்களைக் கூறுவார். இவரை ஒரு முறை சந்தியுங்கள். கைரேகை, பெயர் இராசி, லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல், உத்தியோகம், கல்வி, வியாபாரம், திருமணம், கணவன், மனைவி ஒற்றுமையின்மை குழந்தைப்பாக்கியம், காதல் கலியாணம், விசா பார்த்து சொல்லப்படும். நிலம், வீடு, யோகம் அதிஸ்ட நம்பர்கள் கோர்ட் வழக்குகள், எதிரிகளினால் மந்திரம், சூனியம், பேய், பிசாசு கண்திருட்டி, பரிகாரம் செய்வார்.

You will come to know about your past, present and future by hand prediction, face reading and horoscope intending persons may contact for job, family matters, sickness, promotion, children problems, visas, going abroad, money and any personal problems and removing all black magic and bad evil things doing lakshmi poojas, prayers and protections from enemies.

Opening Hours: 10.00 am to 8.00pm , 7Days a week

தொடர்புகளுக்கு :

Mobile : 07529 548 667 & 07529574 699
02085484698

1st Floor, Sai Hair Dressers, 345 A High Street North, Manor Park, London E12


